பேச்சுரிமைப் போராட்டம்

Phone: No. 4502 | Regd: No. M. 5458
விலை, முக்காலணா | இலங்கை 8 சதம்

மாலை மணி

(திராவிடர் தமிழ் தினசரி கருத்து[illegible])

மாலை 2 | சென்னை 16—2—51 | மணி 74

"எதிர் வழக்காட முடியாது"

—————(o)—————

சென்னை வழக்கில் ஜீவரத்தினம், அப்பாதுரையார் விடுதலை

சென்னை, பிப் 15—

இன்று காலை 9-மணிக்கு சென்னை ஜார்ஜடவுன் பெஞ்சுகோர்ட்டில் தோழர்கள் ஜீவரத்தினம், அப்பாதுரை ஆகியவர்கள் மீது சிட்டி போலீஸ் ஆக்ட் 41-வது பிரிவுப்படி பதிவு செய்யப்பட்டுள்ள வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இவ்வழக்கைத் தோழர் கருணாகரன், வி.எம். கடிகாசலம், ரத்தனலால் டி. தெவ்வே, ஆகிய மூன்று மாஜிஸ்ட்ரேட்கள் விசாரித்துத் தீர்ப்புக் கூறினர்.

குற்றவாளிகளாகக் கருதப்படும் தோழர்கள் என். ஜீவரத்தினம், கா. அப்பாதுரையார் ஆகியவர்கள் பெயரைக் கூப்பிட்டதும் தோழர்கள் கோர்ட்டிற்கு வந்து ஆஜரானார்கள்.

வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மாஜிஸ்ட்ரேட்கள் குற்றப்பத்திரிகைப் படித்துப் பார்த்து போலீஸ் தரப்பு இன்ஸ்பெக்டரைப் பார்த்து, "கூட்டம் கூடவும் கூடி தங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும் இந்த நாட்டு பிரஜைகள் யாவருக்கும் உரிமையுண்டு இன்றைய அரசியல் சட்டப்படி. ஆகவே கூட்டம் நடத்துவது தவறு என்ற விஷயம் மட்டும் போதாது; இவ்வழக்கில் மேலும் எனக்குத் தகவல் தர வேண்டும் என்று கேட்டார்.

போலீஸ் தரப்பில் ஆஜரான சப் இன்ஸ்பெக்டர்" தனக்கு வழக்கை நடத்தப் போதிய தகவல் ஒன்றும் கிடையாதென்றும், வழக்கைப் பதிவு செய்த சப்இன்ஸ்பெக்டர் இன்னும் சிறிது நேரத்தில் வந்து விடுவாரென்றும், அதுவரை வழக்கைச் சிறிது நேரம் தள்ளி வைக்க வேண்டுமென்று' கேட்டு கொண்டதற்கிணங்கவழக்கைச் சிறிது நேரம் தள்ளிவைத்தார்.

வழக்குப் பதிவு செய்த சப் இன்ஸ் பெக்டர் கே. ராமய்யா அவர்கள் வந்ததும் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார்கள் வழக்கைப் பதிவு செய்த சப் இன்ஸ்பெக்டரை நோக்கி மாஜிஸ்ட்ரேட் கருணாகரன் கேட்டதாவது:-

கூட்டத்தை நடத்தினார்கள் என்பதற்காக மட்டும் இவ்விருவர் மீதும் குற்றம் சுமத்த முடியாதே! வேறு காரணம் ஏதாவது உண்டா?

சப்இன்: சென்னையில் கூட்டம் அல்லது ஊர்வலம் ஆகிய எதை நடத்துவதானாலும் சென்னை சிட்டி போலீஸ் ஆக்ட் 41-வது விதிப்படி முன்னதாகவே கமிஷனரிடம் அனுமதிபெற வேண்டும். இக்கூட்டத்திற்கு அனுமதி கொடுக்கப்படவில்லை அனுமதியில்லாமல் கூட்டம் நடத்தியதற்காக இவர்களைக் கைது செய்து வழக்குத் தொடர்ந்தேன்.

மாஜி:— அனுமதி கொடுக்கப்படாததற்குச் காரணம் காட்டாமல் கமிஷனர் தன்னிஷ்டப்படி செய்வது முடியாத காரியம். அது தனி மனிதனுடைய உரிமையைப்பறிப்பதாகும்.

சப்இன்: தி. மு. க செயலாளர் கூட்டம் நடத்த அனுமதி கோரியிருந்தார். கூட்டம் நடக்கும் இடம் தகுதியுள்ளதாக இல்லை என்ற காரணத்தால் மறுக்கப்பட்டிருக்கிறது. இதோ அதன் நகல் எனக்கு அனுப்பப்பட்டது என்று மாஜிஸ்ட்ரேட் அவர்களிடம் காட்டினார்.

மாஜிஸ்ட்ரேட் அதை வாங்கிப் பார்த்துவிட்டு இது சிடி போலீஸ் ஆக்ட் 41-விதிக்கே முரணாக இருக்கிறதே. கூட்டம் அங்கு ஏன் நடக்கக்கூடாது என்பதற்குக் காட்டப்படும் காரணம் சரியாகவில்லையே. கூடுபவர்களைத் தடுப்பதாக இருந்தால் அவர்கள் சட்டவிரோதமான கூட்டத்தைச் சார்ந்தவர்களாக இருக்கவேண்டும் அல்லது அரசாங்கத்தைக் கவிழ்க்கச் சதி செய்யக் கூடியவர்களாக இருக்கவேண்டும். அல்லது-கொள்ளை, கொலை முதலிய சதிசெய்யும்-செய்பவர்களாக இருந்தாலொழிய எந்தக் கட்சிக்காரனாக இருந்தாலும், தனி மனிதனாக இருந்தாலும் தன் அபிப்பிராயத்தைப் பகிரங்கமாகப் பொதுமக்களிடத்தில் கூற உரிமையுண்டு அதைக் கமிஷனர் தனக்குள்ள அதிகாரத்தால் தடுப்பது கூடாது. தடுப்பதும் சரியான செய்கையாகாது.

சப்-இன்: கமிஷனர் சென்னையில் 'எந்தப் பொது இடத்திலும் கூட்டம் கூடுவது-ஊர்வலம் நடத்துவதுபோலீஸ்அனுமதிபெறாமல்நடத்தக்கூடாதென்று ஏற்கனவே அறிவித்திருந்தும் இக்கூட்டம் நடைபெற்றது. அதனால்தான் இவர்கள்மீது, வழக்குத் தொடர்ந்தோம் என்று கூறி அந்த உத்திரவை மாஜிஸ்ட்ரேட்டிடம் காட்டினார்.

பிறகு மாஜிஸ்ட்ரேட் அதைப்

(4 ம் பக்கம் பார்க்க)

சுயாட்சிபெற்ற சுயராஜ்யத்தில் சோறில்லை

ஆண்டவனைக் காட்டி ஆறு அவுன்சு அரிசி கொடுக்கிறார்கள்!

..................(ஃ)..................

மதுரையில் ஜீவாவின் வீரமுழக்கம்

மதுரை, பிப். 13—

"சுதந்திர நாட்டிலே மக்கள் சோறில்லாமல் செத்து மடிகிறார்கள். எப்படிப்பட்ட நாட்டில் இந்தக் கொடுமை? சகாரா பாலைவனத்திலா? உணவுப் பொருள் விளையாத எஸ்கிமோக்கள் நாடுகளிலா? உலோகப் பொருள்கள் மட்டுமே கிடைக்கும் சுவிட்ஜர்லாந்திலா? இல்லை. சோழவள நாடு சோறுடைத்து என்று கவிகள் பாடிய நாட்டிலே, இதைக்கூறினால் இந்த ஆட்சி மூன்று வயதுக் குழந்தைதானே என்கிறார்கள். அப்படியானால் செஞ்சீனா ஆறுமாதக் குழந்தைதானே? அது மட்டும் எப்படித் தன் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டு 10 லட்சம் டன் அரிசி நமக்குத் தருவதாகக்கூற முடிந்தது?" என்று சென்னைக் கார்ப்பொரேஷன் உறுப்பினர் தோழர் என். ஜீவரத்தினம் அவர்கள் 11-2-51 ல் மதுரை புட்டுத்தோப்பு மைதானத்தில் நடந்த ஒரு பிரம்மாண்டமான பொதுக் கூட்டத்தில் பேசுகையில் எடுத்துக்காட்டினார்.

மதுரை புட்டுத்தோப்பு மைதானத்தில் 11-2-51 ஞாயிறு மாலை 7-30 மணிக்குத் தியாகராயர் நினைவுப்படிப்பகத்தின் ஆதரவில் ஓர் மாபெரும் பொதுக்கூட்டம்தோழர் ஆர். எஸ். ராசன் அவர்கள் தலைமையில் நடந்தது. தோழர்கள் எம் அய்யாசாமி, எஸ் முத்து ஆகியோர் பேசியபின் தோழர் என். ஜீவரத்தினம் பேசியதாவது:—

அன்புள்ள தலைவர் அவர்களே! தோழர்களே! நான் மதுரையில் மூன்றாவது தடவையாக உங்கள் முன் பேசுகிறேன். உங்கள் ஊருக்கு வருவதற்கு மிகவும் ஆவ[illegible] இருந்தேன். அச்சம[illegible] உங்களூர் தோழர் முத்து கை[illegible] செய்யப்பட்டார். பின்னர் வ[illegible] முயன்றேன். அவ்வேளை நான் கைது செய்யப்பட்டேன். மூன்றாம் முறை முயற்சித்து உங்கள் மத்தியில் வந்தபேசுகிறேன். நான் ஏன் இங்கு வந்தேன்? கட்சிவேலைகளில் அதிகம் ஈடுபட முடியாத நிலையில்தான் இருக்கிறேன். என்றாலும் தவக்கோலம்பூண்டு எங்கோ இருக்க வேண்டிய பண்டாரங்களெல்லாம் அரசியல்பேசமுன்வந்துவிட்டபோது நான் எப்படிப் பேசாமல் இருக்கமுடியும்?

இந்நாட்டுக்குப் போலீஸ் அவசியம் என்று கூறுகிறவன் நான். நாட்டின் அமைதியையும் ஒழுங்கையும் நிலைநாட்டும் பொறுப்பை நல்ல முறையில் நிறைவேற்ற போலீஸ் தேவை என்று கூறுபவன் நான். ஆனால் யாருக்கு அரசியல் பேச அருகதையில்லையோ யாருக்கும் அரசியலுக்கு சம்பந்தம் இல்லையோ? யார் அரசியல் பற்றிப் பேசக்கூடாதவர்களோ அப்படிப்பட்ட பண்டாரங்களையெல்லாம் போலீஸ் பாதுகாப்புடன் பேச இடமளிக்கும் இந்த சர்க்காரில் நான் பேசுவதற்குத் தடை. 41-வது செக்ஷன்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறேன். போலீஸ்காரர்கள் தங்கள் இஷ்டப்படி நடக்கிறவர்களல்ல. சர்க்காரின் உத்தரவை நிறைவேற்றுபவர்கள். ஆகவே சர்க்கார் என்மீது வழக்குத் தொடர்ந்துள்ளனர். தடை விதிக்கிறது என்று கூறுகிறேன்.

நான் நீரில் முழுகிமுத்தெடுக்கும் பரம்பரையைச் சேர்ந்தவன் நகத்

3-ம் பக்கம் பார்க்க

மாலைமணி

சென்னை 16—2—51 வெள்ளிக்கிழமை

நல்ல தீர்ப்பு!

இந்த ஆட்சியில்:

பேச்சுரிமை கிடையாது!

எழுத்துரிமை கிடையாது!

கூட்டம் கூட அனுமதியில்லை!

மக்கள் உரிமை பறிபோகிறது!

என்று, அன்று இன்றைய ஆட்சிப்பீடத்தை அலங்கரித்துக்கொண்டிருக்கும் காங்கிரஸ் கட்சியினர், மக்கள் முன்புபேசியும், எழுதியும்-கிளர்ச்சி செய்தனர். இவர்களுடைய பேச்சும், எழுத்தும் மக்களை திமயக்கச் செய்தன. "ஒழிக! அடக்குமுறை-ஒழிக! ஏகாதிபத்தியவெறி-ஓங்குக! ஜனநாயகம்" என்று பொதுமக்களும் அவர்களுடன் சேர்ந்து முழக்கமிட்டனர். காரணம்? நாடு விடுதலையடைந்து மக்கள் மக்களாகப் பாவிக்கப்பட்டு இன்பலோகத்தைக் காணலாம் என்று.

காந்தியடிகளால் துவக்கப்பட்ட "வெள்ளையனே வெளியே போ" என்ற போராட்டம் நாற்பத்திஇரண்டில் ஆரம்பிக்கப்பட்டது. அதில் காங்கிரஸ்காரர்கள் மட்டுமல்ல, நாட்டிலுள்ள முற்போக்குக் கட்சிகளும் பங்குகொண்டன. உலகப் பெரும் போருக்குப் பிறகு நாட்டிற்கு விடுதலை கிடைத்தது. நாட்டு விடுதலையில் பெரும் பங்குகொண்ட காங்கிரஸ் கட்சி ஆளும் பொறுப்பை ஏற்றுக்கொண்டது. நாட்டிற்கு நல்லாட்சி கிடைத்துவிட்டது-நாமும் நல்முறை வாழலாமென்று ஏழை எளியவர் நினைத்தனர்—காங்கிரஸ் கட்சியைத் தேர்தலில் ஆதரித்தனர்.

தேர்தல் காலத்தில் காங்கிரஸ் கட்சி மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் பலப் பல. அவைகள் யாவும் காப்பாற்றப்படாமல், காற்றில் பறக்கவிட்டிருப்பது கண்கூடு. உதாரணமாக, பேச்சுரிமை, எழுத்துரிமை, கூட்டம் கூடும் உரிமைக்காகப் போராடுவதாகக் கூறி—ஆட்சிபீடமேறிய அவர்களே, இன்று அதை மறந்து எதிர்க்கட்சியினர் நடத்தும் கூட்டங்களை அனுமதிப்பதில்லை. 13—1—51-ல் சென்னை காசிவிசுவநாதர்கோவில் எதிரில் தி. மு. கழகம் நடத்தவிருந்த கூட்டம் தடை செய்யப்பட்டு, தோழர்கள் என். ஜீவரத்தினம், பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை எம். ஏ.. ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டு அவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவ்வழக்கு ஜார்ஜ்டவுன் கௌரவ மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு—விசாரணைக்குப் பிறகு குற்றவாளிகளாகக் கருதப்பட்ட இருவரும் விடுதலை செய்யப்பட்டனர். மாஜிஸ்ட்ரேட்டுகள் தங்கள் தீர்ப்பில் குறிப்பிட்டுள்ள காரணம், கூட்டம் தடை செய்யப்பட்டதற்குத் தகுந்த காரணம் காட்டவில்லை என்பதோடு மட்டுமல்ல—மற்றவர்கள் கூட்டம் நடத்த அதே இடம் அனுமதிக்கப்பட்டிருந்தும், இவர்களுக்கு அனுமதி தர மறுப்பது தனி மனிதனுடைய உரிமையைப் பறிப்பதாகும். இது இந்திய அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று மிகத் தெளிவாக—தைரியமாக-பாரபட்சமின்றி கூறியிருக்கிறார்கள். இந்த நல்ல தீர்ப்பை நாம் மட்டுமல்ல நாடே வரவேற்குமென்பதில் ஐயமில்லை.

பாசிச எதேச்சாதிகார மனப்போக்குடைய இன்றைய ஆட்சியாளர்கள் தங்கள் கட்சிதவிர, வேறு கட்சியார் நாட்டில் உலாவக் கூடாது என்று நினைத்து, தி. மு. கழக கூட்டங்கள் எங்கும் நடைபெறக் கூடாதென்ற நோக்கோடு-கூட்டங்களுக்குத் தடைபோடுவதும், தடுப்பதுமாகஇருந்துவருகின்றனர். இவர்களது எதேச்சாதிகாரத்திற்கு இந்தத் தீர்ப்பு ஒரு நல்ல படிப்பினையாக இருக்குமென்றே நினைக்கிறோம்.

இந்த வழக்கில் தீர்ப்புக் கூறிய கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள் மூவரையும் நாம் பாராட்டாமல் இருக்க முடியவில்லை. கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகள், போலீசார் கொண்டுவரும் வழக்குகளை கண்ணை மூடிக்கொண்டு ஒருதலைப்பட்சமாகத் தண்டனைவிதிப்பவர்கள் என்ற மாசைப் போக்கி—சட்டம் நியாயம் என்பதை 'நாங்கள் என்றும் கடைபிடிப்பவர்கள்' என்று வெளிப்படுத்தி கௌரவ மாஜிஸ்ட்ரேட்டுகளுக்குரிய கௌரவத்தைக் காப்பாற்றியதற்காக நாம் மறுமுறையும் அவர்களைப் பாராட்டுகிறோம்.

ஜெனரல் பதவியை வகித்த போலி ஜெர்மனியர்

இவரின் மீது 18 மோசடி வழக்கு

கார்ல்ரூஷ் (ஜெர்மனி) பிப். 14—

18 மோசடிகள் செய்ததாகவும் சென்ற மூன்று வருஷத்தில் சுமார் 9,000 பவுன் ஏமாற்றிப்பெற்றதாகவும் "ஜெனரல்" பிட்லி கர் என்பவரின் மீது வழக்கு இங்கு தொடரப்பட்டிருக்கிறது.

சென்ற இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிறகு ஜெர்மனியில் மிகவும் பிரம்மாண்ட மோசடி வழக்கு இதுதான் என்றும், குற்றம் சாட்டப்பட்டவரை சுமார் 100 மாதர்கள் பேட்டி கண்டதாகவும் கூறப்படுகிறது.

இதற்குமுன்பு லீகர் ஏழுமுறை கைது செய்யப்பட்டு ஜெயிலில் இருந்தார்.

சென்ற யுத்தத்தின் பொழுது லீகர் "கால்ரூஷ்காஸனோவா" என்ற புனைப்பெயர் வைத்துக்கொண்டும், ஜெர்மன், ராணுவத்தில் 'கர்னல்" பதவியைப் போலித்தனமாக வகித்தார்.

இரண்டாவது உலகப்போர் முடிந்தபிறகு அமெரிக்கன் துப்பறியும் உத்யோகஸ்தர் என்று கூறி அமெரிக்கன் ராணுவத்தில் "ஜெனரல்" பதவியும் வகித்தாராம்.

பிரபல சினிமா நடிகையான ரீடிஹேவொர்த் (இப்பொழுது தோழியர் ஆலிகான்) ஜெர்மனிக்கு 1946-ல் விஜயம் செய்தபொழுது அவரைச் சுற்றி அழைத்துக்காட்டினாராம்.

உடல் பருமனைக் குறைக்கவழி

டெலிவிஷனில் விளக்க முயற்சி

லண்டன், பிப். 15—

உடல் பருமனைக் குறைக்க வழி என்ன என்பதைச் செய்து காட்ட ஒரு டெலிவிஷன் காட்சி அமைப்பு நிர்வாகி, 20 முதல் 30 வரையில் உள்ள பருமனான பெண்ணையும் 40 முதல் 50 வயது வரை உள்ள பருமனான பெண்ணையும் தேடி வருகிறார். மூன்றே மாதத்தில் படிப்படியாக இளைக்கச் செய்ய முடியும் என்பதை டெலிவிஷனில் செய்துக் காட்டவே இவர் முயல்கிறார். இது பெண்களுக்காகவென்றே ஏற்பட்ட நிகழ்ச்சியாம்.

வாய்க்குள்ளேயே முனகிப் பாடுதல்

உடம்பிற்கும் மனதிற்கும் மிக நல்லது

லண்டன், பிப். 15—

மனம் போன போக்கின்படி வாய்க்குள்ளேயே முனகிக்கொண்டு பாடுவது உடம்புக்கு மட்டுமின்றி மனதிற்கும் மிக நன்மையை உண்டாக்குவதாகும் என்று பிரபல டாக்டர் பார்க்கஸ்வீபர் ஒரு வைத்திய பத்திரிகையில் எழுதியிருக்கிறார்.

இம்மாதிரி முனகிப் பாடுவதால் மூளையும் சந்துஷ்டி அடைவதுடன் வலி மனக் கஷ்டம் முதலியவை நீங்கவும் உதவி செய்கிறது.

ஐ. நா. பாதுகாப்புசபையில் இன்று காஷ்மீர் விவாதம்?

லேக்ஸக்ஸஸ், பிப். 15—

ஐ. நா பாதுகாப்பு சபையில் இன்று காஷ்மீர் பிரச்னைபற்றி விவாதிக்கப்படலாம் என்று தெரிகிறது.

பிரிட்டிஷ் தீர்மானத்திற்கு பல நாடுகளின் ஆதரவு இருந்துவருகிறதென்றாலும் எவ்வளவோ சிறு விஷயங்கள் விளக்கப்படவேண்டியிருக்கிறதாம்.

தீர்மானத்தில் கூறப்பட்டுள்ள யோசனையை அமுல் நடத்துவது குறித்து யுனைடெட் ஸ்டேட்ஸுடன் கலந்தாலோசிக்கப்படவிருக்கிறதாம்.

நிர்வாகஸ்தர் ஒரு அமெரிக்கராக இருக்கவேண்டும் என்பதே அநேக நாடுகளின் விருப்பம் என்று தெரிகிறது.

திருக்கோவிலூர் நகர சமாதானக் கமிட்டி

திருக்கோவிலூர்:— 8-2-51-ல் நடைபெற்ற கூட்டத்தில் "நகர சமாதானக் கமிட்டி" நிறுவப்பெற்று, கீழ்க்காணும் நிர்வாகிகள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

தலைவர்:—டி வி. வெங்கடேஸ்வரன் (பார்வர்ட் பிளாக்) துணைத் தலைவர்; என். பத்மநாபன் (திராவிடக்கழகம்), செயலாளர்&பொருளாளர்; ஆர். தெய்வசிகாமணி இவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

ஸ்விஸ் ராணுவ விஸ்தரிப்பு

பெர்னே, பிப். 15—

1951-55-ல் ராணுவப்படைகளை அதிகப்படுத்துவதற்கு 120,00000 பவுன்கள் ஸ்விஸ் சர்க்கார் பார்லிமெண்டிடம் அனுமதி கேட்டிருக்கிறது.

இத் தொகையில் கால் பங்கு டாங்கிகளைத் தாக்கும் ஆயுதங்களை உற்பத்தி செய்வதற்குச் செலவழிக்கப்படும்.

டாங்கிகள் கட்டுவதைப் பற்றி ஒரு தகவலும் சர்க்கார் கொடுக்கவில்லை.

நெசவாளர் பொதுக்கூட்டம்

அருப்புக்கோட்டை, பிப். 13—

புளியம்பட்டி சாலியர் பாவடித் தோப்பில் அருப்புக்கோட்டை கெடுப்பாவு நெசவாளர் சங்கத்தின் ஆதரவில் 12-2-51 ல் இரவு 7-மணிக்கு 1-வது சர்வாதிகாரி ச. அ. முத்துச்சாமியவர்கள் தலைமையில் சுமார் 25,000 (தாய்மார்கள் உள்பட) மக்கள்கொண்ட நெசவாளர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர்களான ஆ. முத்துச்சாமி, ச மாணிக்கவாசகம், சு காளிமுத்து, தாவுத்கான், (முனிசிபல் கவுன்சிலர்) எஸ். கணேசன் செட்டியார், தோழியர் சிவமணி-கணபதியம்மையார், எம். எஸ். இராமசாமி ஆகியவர்கள் நெசவாளர்களின் நிலைகெட்டவாழ்வினையும், நெசவாளர்களின் போராட்டத்தைப்பற்றியும் விளக்க உரை ஆற்றியபின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

(ந-வி)

சுயாட்சிபெற்ற...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தில் அழுக்கேறாமல் வாழும் கூட்டத்தைச் சேர்ந்தவனல்ல. இந்நாட்டில் உள்ள பாட்டாளிகள் எட்டு மணி நேர வேலை செய்து, அதுவும் சக்திக்குத் தக்கவாறு உழைத்துத் தேவைக்குத் தக்கவாறு கூலி பெற்று நல்ல வாழ்க்கை வசதிகளோடு வாழ வேண்டும் என்று அதற்காக உழைப்பவன். இன்று காலையில் தியாகராயர் நினைவுப் படிப்பகத்தைத் திறந்துவைத்தேன். இதற்கு முன் இங்கு நடந்த ஒரு கூட்டத்தில் சிங்காரவேலர் தினம் பற்றிப் பேசப்பட்டதாம். வெண்ணாடைவேந்தன், வீரக்கோமான் தியாகராயரைப்பற்றியும், சிந்தனைச் சிற்பி, சமதர்மத் தீரர் சிங்காரவேலரைப் பற்றியும் பேசுகிற அளவுக்கு, படிப்பகம் திறக்கிற அளவுக்கு மதுரை விழிப்படைந்திருக்கிறது என்பதை அறிய மகிழ்ச்சியடைகிறேன். நான் பேசும் இடம் புட்டுத்தோப்பு மைதானம். புட்டுக்கு மண் சுமந்த பெருமானின் திருவிளையாடல் நடந்த இடம். கல்லுக்குள் தேரைக்கும் கருப்பை உயிர்க்கும் எண்ணற்ற கோடி ஜீவராசிகளுக்கும் எப்படி எப்படியோ உணவளிக்கும் ஆண்டவன் குடிகொண்டிருக்கும் ஊரிலே, பாவம்! ஒரு தள்ளாத அம்மையார் புட்டு விற்றுத்தான் ஜீவிக்க வேண்டிய நிலை இருந்தது. பகவான் அவளிடம் வந்து அவள் பங்குக்கு ஆளாக வைகைக்கு அணைபோடும்வேலையை மேற்கொண்டார். அதற்குக் கூலி, உதிர்ந்த புட்டுக்கள் அவ்வளவும். பகவான் நினைத்தால் முடியாதா? அவ்வளவு புட்டும் உதிர்ந்துவிட்டது. அதை வாங்கிப் புசித்துவிட்டு வேலை பார்க்காமல் படுத்துறங்கினாராம். அதைக் கண்ட பாண்டிய மன்னன அவர் முதுகில் பிரம்பால் அடித்த அடி, அகில உலகிலும் உள்ள அத்தனை ஜீவராசிகள், முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்து எண்ணாயிரம் ரிஷிமார்கள் உள்பட எல்லோருடைய முதுகிலும் பட்டதென்று புராணம் சொல்லுகிறது. நான்கூட அடிக்கடி சொல்வதுண்டு சென்னையிலே ஒருவர் நம்மவருக்குத் தேள் கொட்டினால் கன்னியா குமரிவரை யாவருக்கும் அது வேதனையாக உறுத்தவேண்டும் என்று. அதைத்தான் உங்களுக்கும் கூறுகிறேன். அகஸ்தியர் தமிழ்நாட்டுக்கு வந்தார் எதற்காக? வடநாடு தாழ்ந்து தென்னாடு உயர்ந்திருந்தது. அகஸ்தியர் இங்கே வந்தார். தென்னாட்டை மிதித்தவுடன் அது தாழ்ந்து விட்டது. உயரும் தமிழ் நாட்டை அமிழ்த்த வந்தவர் அகஸ்தியர். அதைப்போலத்தான் உயரும் தென்னாட்டை அமிழ்த்த அரிகிருஷ்ண மேதாப் வந்தார். ஆகவே வடக்கே இருந்த இங்கே வருவதெல்லாம் தென்னாட்டை அமிழ்த்தத்தான் என்ற எண்ணம் உங்களுக்கு வேண்டும. சுதந்திரம் வந்தால் என்னென்ன நன்மைகள் உண்டாகுமென்று கூறினார்கள்? அடுப்பில் நெருப்பில்லாமல்கூட அப்பம் சுட்டுவிட முடியும் என்று கூட சத்தியமூர்த்தி அய்யர் போன்றவர்கள் பேசினார்கள்.

இன்று சோறில்லை என்கிறார்கள். சுதந்திர நாட்டில் சோறில்லாமல் மக்கள் செத்துமடிகிறார்கள். எப்படிப்பட்ட நாட்டில் இந்த கொடுமை? ஆப்பிரிக்காவிலா? சகாராப்பாலைவனத்திலா? உணவுப் பொருள் விளையாத எஸ்கிமோக்கள் நாட்டிலா? உலோகப் பொருள் மட்டும் விளையும் சுவிட்ஜர்லாந்திலா? இல்லை. சோழவள நாடு சோறுடைத்து என்று கவிகள் பாடிய நாட்டிலே. மூன்று ஜீவநதிகள் ஓடும் நாட்டிலே. இது ஏன்? என்றால் சொல்பவனைப் பிடித்து உள்ளே தள்ளு என்கிறார்கள் மழையில்லை நாலு ஆண்டுகளாக கடவுள் கோபித்துக்கொண்டார் என்று ஏமாற்றுகிறார்கள். தேசியத் தோழனே! நீ எப்படி வாழ்கிறாய் என்பதுகூட எங்கள் கேள்வியல்ல நீ ஏன் வாழ்கிறாய் என்றுதான் கேட்கிறேன். 18 கோடி மக்கள் கொண்ட ரஷ்யாவைப் பார்! கடவுள்களைச் சிறையில் அடைத்து வைத்திருக்கும் ரஷ்யாவைப் பார்! அங்கு கடவுள்கோபித்துக்கொள்ளவில்லை.

இனத்திற்காக ஒரு நாடு பிரிக்கப்பட்டிருக்கிறது. மொழிக்காகப் பிரிக்கப்பட்டிருக்கிறது பிரதேசத்தைக் காட்டிப் பிரிக்கப்பட்டிருக்கிறது; ஆனால் மதத்திற்காக உலகத்தில் எந்த நாடும் பிரிக்கப்பட்டதில்லை பாக்கிஸ்தான் பிரிக்கப்பட்டது. கடவுள் கோபித்துக் கொள்ளவில்லை. பாகிஸ்தான் பிரிந்தால் அது சோறில்லாமல் செத்துப்போகும் என்றுகூறினாய். தான் சாப்பிட்டது போக ஒரு லட்சம் டன் இருக்கிறது வேண்டுமாஎன்று கேட்கிறது. வெட்கம் வேண்டாமா உனக்கு?

பாலாபிஷேகம் செய்து, ஆறு வேளை சோறு போட்டு, கல்யாணம் முடித்துவைத்துக் கட்டிலில் படுக்க வைக்கும் நம் நாட்டிலேதான் கடவுள் கோபித்துக்கொண்டிருக்கிறார். கடவுளை இப்படியெல்லாம் அலங்கோலப்படுத்தியதனாலேதான் இத்தண்டனையை கொடுத்திருக்கிறார் என்று நான் நினைக்கிறேன்.

அமெரிக்காவில் ஐஸ்கட்டியை விமானத்தில் ஏற்றிச் சென்று மேகத்தில் எறிந்து மழையை உண்டாக்குகிறார்கள். நம் நாட்டிலோ நெய்யை நெருப்பில் போட்டுப் புகைத்து யாகம் செய்கிறார்கள் மழை வருமா? நமக்கு ஆறு அவுன்ஸ் அரிசியாக இருக்கும் போது பம்பாயில் எத்தனை அவுன்ஸ்? ஐக்கிய மாகாணத்தில் எத்தனை அவுன்ஸ்? 9 அவுன்ஸ், 12 அவுன்ஸ். யூனிபாரமாக ஆட்சி செய்கிறவர்களின் யோக்கியதை இப்படி இருக்கிறது. இதைக்கேட்டால் 'புல்லைத்தின்னு' என்று கூறுகிறார் மந்திரி முன்ஷியார். எனக்கு மட்டும் அதிகாரமிருந்தால் வடநாட்டார்கள் தவிட்டைத் தின்னட்டும் என்று கூறுவேன். பர்மாவிலே அரிசி கிடைக்கிறது. பாகிஸ்தானிலே அரிசி கிடைக்கிறது. செஞ்சீனாவில் 10 லட்சம் டன் அரிசி இருக்கிறது வேண்டுமா என்கிறான் மா சே-துங். இதைச் சுட்டிக்காட்டி இவர்களின் ஊழலை வெளிப்படுத்தினால் நாங்கள் மூன்று வயதுக் குழந்தைதானே என்று இலேசாகக்கூறித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். மூன்று வயசுக் குழந்தை அல்வா சாப்பிடலாமா? மூன்று வயதுக் குழந்தை 1500 ரூபாய் மாதாமாதம் வாங்கலாமா? உங்களுக்கு வேண்டிய வசதிகள் அத்தனையும் செய்து கொண்டீர்கள். ஏழைகளுக்கு என்ன செய்தீர்கள்? உனக்கு அரசியலில் அனுபவம் இருக்குமானால் சிந்தித்துப்பார்! செஞ்சீனா உன்னைவிட இளமையில் இருக்கிறது.

அபின், கஞ்சா தின்பவர்களைக் கொண்டிருந்த சைனா-மக்கள் சிதறிக் கிடக்கும் சைனா-வரட்சியில் மூழ்கிக்கிடந்த சைனா ஆறுமாதக் காலத்தில் கூறுகிறது 10 லட்சம் டன் தருகிறேன் என்று.

நாட்டின் மோசமான நிலையை எடுத்துக்கூறினால் எங்களை நம்பாதே என்கிறார்கள். கைத்தறி நெசவாளர்களின் பரிதாபக் குரலைத் தணிக்க இவர்கள் என்ன செய்தார்கள்? இந்நாட்டில் 80 ஆயிரம் பேல் நூல் உற்பத்தியாகிறது. 30 அல்லது 40 ஆயிரம்பேல் நூல்தான் தேவை இந்நாட்டுக்கு. அப்படியிருந்தும் நூல் கிடைக்கவில்லை. வேலை பார்க்க வழியின்றிப் பட்டினியால் மடிகிறார்கள்.

நூல் கொடு, பஞ்சப்படி கொடு என்று ஊர் ஊருக்கு மறியல் செய்கிறார்கள். அதில் சில மறியல்கள் காங்கிரஸ்காரர்களாலேயே நடத்தப்படுகிறது. நான் கேட்கிறேன். நாங்கள் மறியல் செய்ய உரிமை இல்லையென்று கூறும் காங்கிரஸ் தோழனே உன்னைத்தான் கேட்கிறேன். உனக்குமட்டும் மறியல் செய்ய உரிமை உண்டா? தோழர் கன்னியப்பன், எம். எல். ஏ. மறியல் செய்யச்சொல்வது என்றால் என்ன நேர்மை இருக்கிறது? ஏமாற்றுவதைத் தவிர வேறென்ன? ஆளுகிற கட்சிக்காரர்களே கலெக்டர் ஆபீசின் முன்னால் மறியல் செய்யச் சொல்வது என்றால் இது அயோக்கியத்தனமல்லவா? கலெக்டரா நூல் பேல்களைப் பூட்டிவைத்திருக்கிறார்?

டில்லிக்குச்சென்று, மத்திய சர்க்காரிடம் கேட்டு வாங்கிக் கொடுக்க வேண்டிய கடமையும் வசதியும் படைத்தவர்கள் அதிகாரத்தில்வீற்றிருப்பவர்கள்; கலெக்டர் ஆபீஸ் முன் மறியல் செய்யத் தூண்டுவது என்றால் உலகத்திலேயே எங்கும் இல்லாத விசித்திரம்தான். அவர்களுக்கு நேர்மையான வழியில் முயன்று மக்களின் குறைகளைத் தீர்க்க நேரமில்லை. சட்டசபையில் தூங்குவதற்கு நேரம் இருக்கிறது. எங்களை அடக்க நேரம் இருக்கிறது, எங்கள் கூட்டங்களைத் தடுக்க நேரமிருக்கிறது, வழக்குத்தொடுக்க நேரம் இருக்கிறது, கருப்புக்கொடி காட்டவிடாது தடுக்க அடிக்க நேரம் இருக்கிறது, உயிருக்கு ஊசலாடும் மக்களின் குறையைத்தீர்க்க அதற்கான முயற்சி செய்ய நேரம் இல்லை, மனமில்லை.

திராவிட இயக்க எதிர்ப்புப் பிரச்சாரக் குழு என்று அமைக்கிறார்கள். ஆளும் கட்சியினரே எதிர்க்கட்சிகளை அடக்குவதற்கு இம்மாதிரிக் கலகக்கோஷ்டிகளை உற்பத்திசெய்யும் முட்டாள்தனம் உலகத்தில் வேறு எந்த நாட்டிலாவது காண முடியுமா? குற்றம் செய்பவர்களைத்தண்டிக்கச் சட்டம் இருக்கிறது, நீதிமன்றம் இருக்கிறது. அதிகாரம் இருக்கிறது போலீஸ் இருக்கிறது. சிறைச்சாலை இருக்கிறது. இவ்வளவும் உன் கையில் இருந்தும் கலகக்காரர்களை உண்டாக்குகிறாய், இந்த நாட்டை அமைதியாக ஆளவேண்டும் என்ற எண்ணம் உன்னிடம் இருந்தால் நேர்மையாக நடக்கக் கற்றுக்கொள்! வெள்ளைக்காரனிடமாவது கற்றுக்கொள்! இங்கிலாந்து தேசத்தில் தொழிற்கட்சி எப்படி ஆள்கிறது.வரிகளை உயர்த்திப்பணக்காரர்களிடம் உள்ள பணத்தைப் பிடுங்குகிறது. ரொட்டி விலைகளைப் பாதிக்குப் பாதியாகக் குறைத்து பட்டினியினின்று மக்களைக் காப்பாற்றுகிறது. இதுவன்றோ ஆட்சி முன்னாள் காங்கிரஸ் தலைவர் கிருபாளனி கூறுகிறார் வெள்ளைக்கார ஏகாதிபத்யம் போகவேண்டுமென்று காந்திஜி சொன்னார், வெள்ளைக்காரன் போய்விட்டான் ஏகாதிபத்தியம் போகவில்லை. என்று. அதைத்தான் நாங்களும்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுரிமைக்காகப் போராடி விடுதலை பெற்ற வீரர்கள்!



கா. அப்பாதுரை என். ஜீவரத்தினம்

பேச்சுரிமை . . .

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பார்த்துவிட்டுசரிநீங்கள்கூண்டிலேரி வழக்கை ருசுப்படுத்துங்கள் என்று கூறியதற்கிணங்க பின் வருவாறு கூறினர்.

என் பெயர் கே. ராமய்யா, நான் தற்சமயம் எழுகிணறு போலீஸ் ஸ்டேஷனில் சப்-இன்ஸ்பெக்டராக வேலை பார்க்கிறேன். எனக்கு எட்டு ஆண்டு சர்விஸ் இருக்கிறது எனக்கு கமிஷனரிடமிருந்து ஒரு மெமோ 13-1-51ல் வந்தது. அதில் காசிவிஸ்வநாதர் கோவிலுக்கு முன் தி. மு. கழகம் ஓர் கூட்டம் நடத்த அனுமதி கோரியிருந்தனர். அதை அனுமதிக்க முடியாதென்று மறுக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் நான் அங்கு சென்று அனுமதியில்லாமல் நடைபெறும் கூட்டம் சட்டவிரோதமானதென்று இந்த இரு எதிரிகளுக்குப் கூறி கூட்டத்தை நடத்தவேண்டாமென்று எச்சரித்தேன். அதற்கு ஜீவரத்தினம் "கூட்டத்தை நடத்த எங்களுக்கு உரிமையுண்டு-பேச்சுரிமையை விட்டுக்கொடுக்க முடியாது. நீங்கள் உங்கள் இஷ்டப்படி என்ன வேண்டுமானலும் செய்துக்கொள்ளலாம்' என்று கூறினர். பிறகு அமைக்கப்பட்டிருந்த மேடைக்குச் சென்று அப்பாதுரையார் தலைமை வகித்து இரண்டு நிமிஷம் பேசினர். நான் அவரைக் கைது செய்தேன். பிறகு ஜீவரத்தினம் பேசினர். அவரையும் கைது செய்து அழைத்துப்போய் வழக்கைப் பதிவு செய்தேன். சிடி. போலீஸ் ஆக்ட் 41-வது விதிப்படி குற்றம் செய்தவர்களாதலால் இருவரும் தண்டிக்கப்படவேண்டியவர்கள்.

மாஜி: கூட்டத்தில் ஏதாவது கலவரம் ஏற்பட்டதா?

ச. இ: ஆம் ஏற்பட்டது,

மாஜி: என்ன கலவரம்.

ச. இ: கூட்டத்தில் கல் வந்து விழுந்தது.

மாஜி: நான் அதை கேட்கவில்லை. ஒரு நாடகம் நடக்கிறது. அதில் பபூன் வேஷக்காரன் வருகிறன். அவனைப் பார்க்க ஜனங்கள் எல்லோருமே எழுந்து நிற்கிறர்கள். இதுவும் கலவரந்தான் நான் அதைக்கேட்கவில்லை. மேடையில் ஒருவர் பேசுகிறர். பலர் பலவித கேள்விகள் கேட்கிறர்கள். அதனல் பேச்சு தடைபட்டு கூட்டம் குழப்பத்தில் முடிவதுண்டு; அதன்படி ஏதாவது ஏற்பட்டதா?

ச. இ: இல்லை.

மாஜி: கூட்டம் நடந்தால் ஏதாவது அசம்பாவிதமான விபரீதம் ஏற்பட்டுவிடும் என்று கருதினீர்களா?

ச-இ: அப்படி ஒன்றும் ஏற்பட்டுவிடுமென்று நான் நினைக்கவில்லை.

மாஜிஸ்ட்ரேட் சப்இன்ஸ்பெக்டர் சாட்சியம் முடிந்ததும் குற்றம் சாட்டப்பட்டவர்களைப் பார்த்து "நீங்கள் ஏதாவது சாட்சியம் கொடுக்கப் பிரியப்படுகிறீர்களா?" என்று கேட்டார். நான் என் கழக் கொள்கைப்படி எதிர் வழக்காப் பிரியப்படவில்லை. சப்இன்ஸ்பெக்டரை மட்டும் குறுக்கு விசாரணை செய்யப்பிரியப்படுகிறேன்.

மாஜி: தாராளமாகக் கேட்கலாம் என்று கூறியதும் மறுபடியும் சப் இன்ஸ்பெக்டர் கே. ராமய்யா அவர்கள் கூண்டில் ஏறினர்.

ஜீவ: காசிவிசுவநாதர் கோவில் மைதானத்தில் சுமார் 20 ஆண்டுகளாகப் பல கட்சியாரும் கூட்டங்கள் நடத்தி வருவது உங்களுக்குத் தெரியுமா?

ச இ: எனக்குத் தெரியாது. ஆனல் கூட்டங்கள் நடப்பதுண்டு என்பது மட்டும் கேள்விப்பட்டிருக்கிறேன்.

ஜீவ: நீங்கள் எவ்வளவு நாட்கள் அந்த டிவிஷன் சப்இன்ஸ்பெக்டராக இருந்து வருகிறீர்கள்?

ச-இ: சில மாதங்களாக

ஜீவ: உங்கள் காலத்திலும் பல கட்சி கூட்டங்கள் நடந்திருக்கிறதல்லவா!

ச-இ: நடந்திருக்கிறது. எந்தக் கட்சி கூட்டமென்று நிச்சயமாகச் சொல்லமுடியாது.

ஜீவ: இப்பொழுது விசாரணையிலுள்ள தி. மு. கழக கூட்டத்திற்கு முன்பு ஓர் கூட்டம் நடந்திருக்கிறதாவது உங்களுக்குத் தெரியுமா?

ச-இ: ஆம்! தெரியும்.

ஜீவ: எந்தக் கட்சி கூட்டம்?

ச-இ: காங்கிரஸ் கூட்டம் ஓர் சாமியார் பேசினர்.

ஜீ: அந்த கூட்டம் கமிஷனர் அனுமதி பெற்றுதானே நடைபெற்றது?

ச-இ: ஆம்!

ஜீவ: அந்த காங்கிரஸ் கூட்டத்திற்கு முன் திராவிடர் கழக சப்பந்தமான கூட்டம் ஒன்று நடத்த அனுமதி கோரியதற்கு மறுக்கப்பட்டது உங்களுக்குத் தெரியுமா?

ச-இ: தெரியாது!

ஜீவ: அனுமதிமறுக்கப்பட்டதும் உங்களுக்கு தகவல் கிடைப்பது வழக்கந்தானே?

ச-இ: ஆம்! மறுக்கப்பட்ட கூட்டம் எந்த கட்சியாருடையது என்பதை அதிற் குறிப்பிட தஸ்தாவேஜிகளைக் காணமல் நிச்சமாகக் கூற முடியாது

ஜீ: கூட்டத்தில் கல் விழுந்ததாகக் கூறினீர்களே எப்பொழுது, எங்கு, யார்மீது விழுந்தது? சப்-இன்ஸ்பெக்டர் சற்று பதில் கூறத் தயங்கினர். மாஜிஸ்ட்ரேட் அவரைப்பார்த்து நீங்கள் ஏன் மறைக்க வேண்டும். உண்மையைச் சொல்ல நீங்கள் உண்மை பேசினல் பொது ஜனங்களின் மதிப்பு உங்கள் சார்பில் வளரும். நாங்களும் நியாயத்தைக்கூற ஏதுவாகும்.

சப்-இன்: கல் எங்கிருந்து யாரால் போடப்பட்டதென பது தெரியாது நானும் பார்க்கவில்லை. சொல்லக் கேள்விதான்.

ஜீ: நீங்கள் எங்களைக் கைது செய்த பிறகு ஸ்டேஷன் வரை நடத்தித்தானே அழைத்துப்போனீர்கள்?

ச-இ: ஆம்!

ஜீ: ஸ்டேஷன் எவ்வளவு தூரம் இருக்கும் கூட்டம் நடந்த இடத்திற்கும் அதற்கும்?

ச-இ:- இரண்டு பர்லாங்குதூரம் இருக்கும்.

ஜீ:- போகும் வழியில் ஏதாவது கலவரமோ கல்வீச்சோ நடந்ததா?

ச-இ:- கலவரம் ஒன்றும் நடக்கவில்லை-உங்கள் மீதோ என்மீதோ கல்வீச்சும் நடக்கவில்லை.

பிறகு தோழர் ஜீவரத்தினம் மாஜிஸ்ட்ரேட்டைப் பார்த்துகூறியதாவது. "நாங்கள் இந்த வழக்கில் எதிர்வழக்காடப் போவதில்லை. இந்திய அரசியல் சட்டப்படி எங்களுக்கு எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க உரிமையுண்டு. அது இந்த ஆட்சியில் பறிக்கப்படுகிறது. அதை நீங்கள் போலீஸ் தரப்பு சாட்சியத்திலிருந்து நன்கு தெரிந்து கொண்டீர்கள். மற்றவை உங்கள் தீர்ப்புக்கே விட்டுவிடுகிறேம், என்று கூறினர்.

மூன்று மாஜிஸ்ட்ரேட்டுகளும் சிறிது நேரம் கலந்து ஆலோசித்த பிறகு பின்வருமாறு தீர்ப்புக்கூறினர். அதன் சுருக்கம் பின்வருமாறு:—

சென்னை சிடி போலீஸ் ஆக்ட் 41 பிரிவுப்படி கூட்டங்கள் நடத்த முன் அறிவிப்பின் பேரில் போலீஸ் கமிஷனர் அனுமதிபெற வேண்டுமென கமிஷனரின் உத்திரவு ஒன்று அமுலிலிருந்து வருகின்றது. அதன்படி அனுமதி கோரிய குற்றவாளிகளின் வேண்டுகோள் மறுக்கப்பட்டிருந்தும் கூட்டத்தை எதிரிகள் நடத்திக் குற்றம் செய்தார்கள் என்பது இப்பொழுது கோர்ட்டுக்கு முன்புள்ள வழக்கு இதில் கூட்டம் மறுக்கப்பட்ட காரணத்தைக் காட்டும் மெமோ ஒன்று போலீஸ் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டது. அதில் காட்டப்பட்டுள்ள காரணம் மனுவில் குறிப்பிட்டுள்ள இடம் கூட்டம் நடத்தத் தகுதியற்றது என்பதைத் தவிர வேறு ஒன்றும் கூறப்படவில்லை போலீஸ் தரப்பில் கூறப்பட்ட சாட்சியத்தில் கூட்டப் நடந்தால் அசம்பாவிதம் ஒன்றும் நேர்ந்துவிடாது என கூறப்பட்டிருக்கிறது கூட்டம் நடத்த முயற்சித்த இடம், இதற்கு முன் பல கூட்டங்கள் நடந்திருக்கிறதென்பதை போலீஸ் தரப்பில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மீறப்பட்டதாகக் கூறப்பட்ட கூட்டத்திலும் கலவரம் ஏற்படக் காரணம் ஏதும் இருந்ததாக ருசுப்படுத்தவில்லை. சிட்டி போலீஸ் ஆக்ட் 41 வது பிரிவுப்படி கூட்டங்கள் மறுக்கப்பட தகுந்த காரணம் காட்டப்பட வேண்டுமென்று நன்ருக விளக்கப்பட்டிருக்கின்றது. மறுக்கப்பட வேண்டிய காரணமும் போலீஸ் தரப்பில் நன்கு ருசுபடுத்தவில்லை ஆகவே எதிரிகளை தண்டிக்கப் போதிய சாட்சியும் இல்லாததால் எதிரிகள் குற்றவாளிகளல்ல என்று நாங்கள் கருதி விடுதலை செய்கிறேம்.

வட ஆற்காடு மாவட்ட
திராவிட மாணவர் முன்னேற்றக் கழக

முதல் மாநாடு

வாணியம்பாடியில் 24—2—51-ல்
நடைபெறும்

தலைவர் :-P. R. கோகுலகிருஷ்ணன் B. A.
(சட்டக் கல்லூரி மாணவர்)

திறப்பாளர்:-இரே. இளம்வழுதி M.A.B.L.

பேச்சாளர்கள் :—அறிஞர் அண்ணு M A., இரா. நெடுஞ்செழியன் M. A., E. V. K. சம்பத், வேலூர் சிற்றரசு, A. V. P. ஆசைத்தம்பி, மதியழகன் B. A., கபீர் (மருத்துவக் கல்லூரி மாணவர்) க. அப்பாதுரை M. A., அரங்கண்ணல், தில்லை வில்லாளன் B. A. (Hons) ஆகியோர் கலந்துகொள்வா.

மாநாட்டு இரவன்று கே. ஆர். ஆர். குழுவினர் நடிக்கும்
நாடகம் நடைபெறும்

நுழைவுச்சீட்டு விபரம்:
வரவேற்பாளர் ரூ 3, பிரதிநிதி ரூ. 2. பார்வையாளர் ரூ 1.

செயலாளர் A. R. பார்த்தசாரதி
வ. கு. தலைவர் A. L. முனிரத்தினம்

சுய ஆட்சி...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

கூறுகிறேம். வடநாட்டு ஏகாதிபத்தியத்திடம் இருந்து விடுபட்டுத் தனித்த சுதந்திர ஜனநாயக சமதர்மக் குடியாட்சி வேண்டுமென்கிறேம். அதை நாங்கள் அடைந்தே தீருவோம்" என்று சுமார் இரண்டு மணி நேரம் உணர்ச்சிகரமாகப் பேசினர். பின்னர் மதுரையின் முன்னுள் நகரசபைத் தலைவர் ஆர். எஸ். நாயுடு அவர்களின் மறைவுக்கு அனுதாபந் தெரிவித்தும், கைத்தறி நெசவாளர் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

Edited, Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press 2/45 Muthumari Chetty Street, Madras-1.